1024
1024
4.5

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விகாரி
ந்திகை - மார்கழி

DECEMBER
1959

குதி 21
தி 12

Vol. 21
No. 12

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜசர்மா, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

இன்றைய சூழ்நிலை	3
செய்திகள்	8
…ாய்ச்சி வழி	13
…ச் சொற்கள் அகராதி (தனி)	45—48
…ரத்னுகரம்— (தனி)	17—20

Annual
Subscription
Rs. 5/-

JL
3ைா21, N59
M59·21·12
188880.

…: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

ஸ்தாபிதம் : 1902. ✲ போன் நெ. 44 (திரூர்)

பிராஞ்சுகள் :—

கல்லாய் ரோடு. கோழிக்கோடு (போன் நெ. 155);

வடக்கம்தரா, பாலக்காடு (போன் நெ. 194);

விற்பனை டிப்போ : வெற்றிலைக்குளம் ரோடில்.

திரூர் (போன் நெ. 31);

ஈரோடு (முனிசிபல் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்);

மஹாத்மா காந்தி ரோடு, எரணாகுளம் (போன் நெ. 674).

ஸ்டாட்ச்யூ ரோடு, திருவனந்தபுரம்.

★ ★ ★

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக் கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மானேஜிங் டிரஸ்டி.

A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

Have your requirments from :—

KALIA BROTHERS (Regd.)

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA.

ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

எமது விசேஷ மருந்துகள்

4. சந்திரிகாவலேஹம்.

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம். யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிர ஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, *மானேஜிங் டைரெக்டர்*

188880

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 21	விகாரி – கார்த்திகை – மார்கழி	பகுதி 12
Vol. 21	DECEMBER 1959	No. 12

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

இன்றைய சூழ்நிலை.

ஆயுர்வேதந்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பும் வாய்ப்பும் இன்று வைத்தியர்களின் வசத்திலுள்ளது. அரசியல் சூழ்நிலையில் பெயரளவிலாது வாயளவிலாவது ஆயுர்வேதத்திற்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையைக் காண்கிறோம். தாற்காலிகமாகவும் ஹானரரியாகவுமிருந்த மத்ய ஆயுர்வேத ஆலோசகர் பதவிக்கு இன்று நிரந்தரமான முழுநேர அதிகாரியை நியமித்திருப்பதையும், முன்னரிருந்த ஆராய்ச்சிக் குழுவின் ஸ்தானத்தில் புதுக்குழுவை நியமித்திருப்பதையும் இவ்விரண்டிலும் தகுந்த நபர்களும் ஸ்தானம் பெற்றிருப்பதையும் காண்கிறோம். இந்த மனப்பான்மை ஸ்திரப்பட்டு நல்வழியே சென்று நற்பயனைத் தரவேண்டுமென்று விரும்புகிறோம்.

சென்னை சர்க்காரின் கொள்கையிலும் ஒரு மாறுதல் ஏற்படலாம் என எதிர்பார்க்கிறோம். கொள்கைத் தவறுகளும் வழித் தவறுகளும் காரணமாக இன்று இணைப்பு வைத்யக் கல்லூரியில்

ஒரு பயங்கரச் சுழல் ஏற்பட்டுள்ளது. சிறிது சிறிதாக நாட்டு வைத்ய முறைகளின் அம்சம் குறைக்கப்பட்டுவரும் முறையில் எல்லைக்கோடு சமீபித்துவிட்டது. இனி குறைக்கவேண்டியதோ எடுக்கவேண்டியதோ ஒன்று இருக்குமா என்பது சந்தேகம்தான். முழு அலோபதிக் கல்லூரியாக மாறத் தருணம் இனித் தாமதியாது. மாணவர்களின் கிளர்ச்சியும் நிர்பந்தமும் அலோபதிகர்களின் அதிகாரபலமும் நேரத்தை நெருக்கி வருகின்றன. ஆக இனி G. C. I. M. என்ற கல்வித் திட்டம் தொடர்ந்து நடைபெறுமானுல் அலோபதிக் கல்வித் திட்டமாகத்தான் நடைபெறவேண்டும். 'கெட்டும் நொண்டிப்பெயர் எதற்கு' என்ற கொள்கையில் பஹிரங்கமாக அலோபதிக் கல்லூரியாகவே மாறவும் மாறலாம். இதுதான் சென்னையின் அரசியல் சூழ்நிலை.

நமது மஹாமண்டல தூதுகோஷ்டியினர் சென்னை சென்று மந்திரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் இணைப்புக் கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் நேரில் கண்டு பேசிய போது அலோபதிக் கல்லூரியாக மாற்றும் நிலை ஸ்திரப்பட்டு வருவதாகவே புலப்பட்டது. எப்படியும் G. C. I. M. படிப்பு இதே ரீதியில் தொடர்வதில் அரசாங்கத்திற்கோ மாணவர்களுக்கோ அலோபதியினருக்கோ விருப்பமில்லை. ஆனல் எப்படி இதை மாற்றுவது என்பதில் விளக்கம் இன்னும் உருவாகவில்லை. நாட்டு முறைகளுக்கென ஒரு சிறு மான்யத்தொகையை ஒதுக்கி அவைகளின் ஆராய்ச்சி என்ற பெயரில் ஏதாவது பெயரளவில் ஒரு காரியத்தைச் செய்துகொடுத்தால் போதுமானதென்பதே அரசியல் ஆலோசனையாளரின் முடிவெனத் தெரிகின்றது. மந்திரிகளும் இவ்விஷயத்தில் நேரிடையாக பதில் கூருமல் G. C I. M. கல்வித் திட்டம் நீடிப்பதில் தமக்கு விருப்பமில்லை என்பதையும் ஆனல் நாட்டுமுறைக் கல்வி விஷயம் இனி எவ்விதம் நடத்தப்பட வேண்டும் என்று திட்டமாகத் தீர்மானிக்கப்படாததால்தான் தாமதம் என்றும், திட்டமான யோசனைகளையளித்தால் அரசாங்கம் அதைப்பற்றி யோசிக்கும் என்றும் கோஷ்டியினரிடம் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் ஒரு புதிய திருப்பம் காணப்படுவதாகவே நாம் கருதுகிறேம். இதுவரை சுகாதார மந்திரிகளாகவிருந்த

T. S. S. ராஜன், ஸ்ரீ A. B. ஷெட்டி இவர்கள் காலத்திலிருந்ததை விட ஸ்ரீ மாணிக்கவேலர் காலத்தில் இணைப்பு முறைக் கல்வி முழு அலோபதிக் கல்வியாக மாறுவது துரிதப்படுத்தப்படுவதை நாம் உணரவேண்டியிருக்கிறது. இதையும் நாம் நமது நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று சிலர் கருதுகின்றனர். இந்த இணைப்பு முறையை அகற்றும் செயல் மிகவும் நல்லது. அதைத் துரிதப்படுத்துவதும் நல்லது. ஆனால் இக் கல்லூரியில் இணைப்புமுறைத் திட்டத்தை அரசாங்கம் கைவிடுவதை நாம் வரவேற்கலாமே தவிர, கல்லூரியையும் அதன் சாதனங்களையும் அலோபதிக் கல்லூரியாக்கும் யோசனையை அரசாங்கம் கையாண்டால், அதைக் கைவிடும் வழியில் நாம் கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். கல்வித் திட்டத்தை மாற்றி நாட்டுவைத்ய முறைகளின் வளர்ச்சிக்கேற்றவாறு கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டுமே தவிர அலோபதிக் கல்லூரியாக மாற்றும் செயலுக்கு நாம் சற்றும் இடம் தரக் கூடாது. இதுவரை இணைப்புத் திட்டத்தை அரசாங்கம் கைவிடாது என்று இருந்து வந்த கொள்கையை அரசாங்கம் மாற்றிக்கொள்ளும் தருவாயிலிருப்பதே நமக்குச் சாதகமான சூழ்நிலை. இதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.— என்பது இவர்களின் கருத்து. இதற்காகவே திருச்சியில் நகரப் பொதுமக்களின் கூட்டத்தை ஏற்பாடு செய்து திருச்சி நகரின் மக்கள் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளச் செய்து கல்வித் திட்டத்தை மாற்றியமைத்து இக்கல்லூரியை மறுபடியும் நாட்டுவைத்யக் கல்லூரியாக மாற்றவேண்டு மென்று தீர்மானங்களை தமிழ் நாடு ஆயுர்வேத மகாமண்டலம் நிறைவேற்றியது. இதே நோக்கில் ஈரோடு கோயமுத்தூர் புதுக்கோட்டை முதலிய முக்கிய நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இணைப்பையகற்றுவதில் அரசாங்கம் துரிதமாகச் செயலாற்றி வருகின்ற தென்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல் நிரூபிக்கின்றது. சென்னையில் பிரபல வைத்யரும் தமிழ்நாட்டின் பத்திரிகைகள் மூலம் ஆயுர்வேத ஸேவையைப் பொதுமக்களுக்குப் பல துறைகளில் செய்துவருபவரும், ஆயுர்வேத அரசியல் உட்துறையில் அதிகப் பழக்கமுள்ளவருமான ஸ்ரீ மு. வ. வே. ரா. அவர்கள் இந்தத் தகவலை அளித்துள்ளார்கள்.

"இணைப்புமுறைக் கல்லூரியில் ருக்விநிச்சயம் (Pathology) என்ற பாடம் ஆயுர்வேத சாஸ்திரப்படி வேண்டாம். அவ்விஷய மாக ஓரிரண்டு கேள்விகளைக் காய சிகித்ஸை (Medicine) கேள்வித் தாளில் சேர்த்துக் கொண்டால் போதுமானது. திரவ்யகுணவிக் ஞானம் ரஸசாஸ்திரம் இரண்டும் தனித்தனி பாடமாகவோ பரீ க்ஷையில் தனித்தனிக் கேள்வித் தாளாகவோ கையாள வேண் டியதில்லை. இரண்டையும் சேர்த்து ஒரே கேள்வித்தாளாக ஏற்றி டல் போதும்." இது சமீபத்திய சென்னை சர்க்கார் உத்தரவு' நிதானம், திரவ்ய குணவிக்ஞானம், ரஸசிகித்ஸை என்ற மூன்று பகுதிகளும் அகற்றப்படுகின்றன. காய சிகித்ஸை மாத்திரம் இனி அகற்றப்படவேண்டியது மீதி என்று நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

G. C. I. M. மாணவர்களை M. B. B. Sக்குச் சமமாகக் கருதுவதி லோ, அம்மாணவர்கள் தமக்கு இழுக்கும் சிரமமும் அளிப்ப வையாகக்கருதும் 'பிலாஸபி' பாடங்களை அகற்றி மாணவர்களுக் கும் நன்மைசெய்து ஆயுர்வேதத்திற்கும் விடுதலையளிப்பதிலோ, நமக்கு முழுதும் சம்மதமே. அவர்களுக்கென கல்வித் திட்டத்தை மாற்றி அவர்களுக்கு முழு அலோபதிக் கல்வியை அளிப்பதிலும் சம்மதமே. ஆனால் நாட்டுவைத்ய முறைகளுக்கென அளித்த மான்யங்களைக் கொண்டே உருவான அக்கல்லூரியையும் அதன் சாதனங்களையும் அலோபதிக்குப் பயன்படும்படி செய்ய அரசாங் கத்திற்கு எவ்வித அதிகாரமும் இருக்காது என்பதைத்தான் நாம் அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்தவேண்டும். இதை வற்புறுத்தும் பொருட்டே தமிழ்நாடு ஆயுர்வேத மகா மண்டலம் மக்கள் பிரதி நிதிகளிடம் நேரிடைத் தொடர்புகொண்டும் மக்களிடம் நேரிடையே பிரசாரம் செய்தும் ஒரு கிளர்ச்சியை உருவாக்கி வருகின்றது. ஸ்ரீ மு. வ. வே. ரா. அவர்களும் இப்பணியில் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன்வந்துள்ளார்கள். அவர்களுக்குப் பத்திரிகைகளிலும் பொதுமக்களிடமும் உள்ள செல்வாக்கு அளவு கடந்தது. பொதுமக்களும் பத்திரிகைகளும் அளிக்கும் ஆதரவுபலத்தில்தான் நமது லக்ஷ்யம் சித்தியாகும். அத்துடன் கோவை ஆர்யவைத்யசாலா பார்மஸித் தலைவர் ஸ்ரீ ராமவாரியர் அவர்களும் இவ்வியக்கத்தில் தமது பூர்ண

ஒத்துழைப்பைக் காட்டி வருகிறார்கள். இவ்வியக்கத்தைத் தமிழ் நாட்டின் பிரபல ஆயுர்வேத வைத்யர் ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரீ ஆயுர்வேதாசாரிய அவர்களும் மகாமண்டலத் தலைவர் ஸ்ரீ A. ராகவராவ் அவர்களும் காரியதரிசி ஸ்ரீ T. S. ஈச்வர அய்யர் அவர்களும் உருவகப்படுத்தி வருகின்றனர். இவர்களது பணியில் நாடெங்குமுள்ள வைத்ய சகோதரர்கள் பங்கு கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கை.

மஹாமண்டல அங்கத்தினர்களுக்கு

இந்த இதழுடன் 1959 வருஷத்திய சந்தா முடிவடைகிறது. 1960 ஜனவரி முதல் புதிய ஆண்டு ஆரம்பிக்கின்றது. சில முக்கிய அங்கத்தினர்கள்கூட இன்னமும் 1959 ஆண்டு சந்தாவை செலுத்தவில்லை எனத் தெரிகிறது. பத்திரிகையை நடத்துவதில், காகிதங்களை கடும் விலை கொடுத்து வாங்குவதிலும் விநியோகிப்பதிலும் ஆகும் செலவை அங்கத்தினர் யாவரும் அறியக்கூடும். அவர்களது சந்தா உதவி கொண்டே வைத்திய சந்திரிகை நிர்வாஹமும் மஹாமண்டலப் பொது நிர்வாஹமும் தடைபெற வேண்டியிருக்கிறது ஆதலால் டிஸம்பர் மாதக் கடைசிக்குள் தங்களது சந்தாவை "பொதுக் காரியதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம், 27, சின்னக்கடைத் தெரு, திருச்சி"— என்ற விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறோம்.

★

ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

நவம்பர் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	800	
பெண்கள்	866	2189
சிறுவர்	523	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்.
ராயபாளையம் எஸ்டேட்.

பத்திரிகை வரவு

கிராம வைத்தியன்

ஆசிரியர். வைத்ய R. ரெங்கநாதன், 74, கோர்டு தெரு, ஈரோடு.

வைத்ய திரு. R. ரெங்கநாதன் அவர்களை ஆசிரியராகவும் வைத்ய திரு. V. S. மணி அவர்களையும் வைத்யவள்ளல் திரு T. V. ராமசாமி சாமியார் அவர்களையும் உதவி ஆசிரியராகவும் கொண்டு கிராம வைத்தியன் என்ற பத்திரிகை மூன்று மாதங்களுக்கொருமுறையாக சென்ற ஜூலையி லும் அக்டோபரிலும் வெளியாகியுள்ளது. இவ்விரு இதழ்களிலும் வைத் யனுக்குப் பல்வேறு ரகசிய முறைகளைத் தெளிவு படுத்தியும் நோய்களில் உபயோகிக்கும் வழிகளிலும் அனுபவத்தை விவரித்து எழுதியும் கட்டுரை கள் வெளியாகியுள்ளன. திரு V. S. மணி, ஸ்ரீமதி R. தங்கம்மாள் (காலம்சென்ற வைத்ய T. G. ராமமூர்த்தி அய்யர் அவர்கள் குமாரி) ஆசிரியர் ஸ்ரீ ரங்கநாதன் இவர்களின் கட்டுரைகள் வைத்யர் அனைவருக்கும் மிகவும் உதவியளிப்பவை. வருடச்சந்தா ரூபாய் இரண்டுதான். மாதப் பத்திரிகையாக இதை வெளியாக்க உதவுவது வைத்ய சமூகத்தின் கடமை யாகும். பத்திரிகைகளை நடத்துவதில் நல்ல அனுபவம் பெற்ற ஸ்ரீ ரங்கநாதனின் மேற்பார்வையில் வைத்ய சமூகத்துக்குப் பெரும் சேவையை இப்பத்திரிகை செய்துவரும் என நாம் எதிர்பார்க்கிறோம். —S. V. R.

செய்திகள்.

திருச்சி ஆயுர்வேத ஸபை

இந்த ஸபையின் மாதாந்தர தத்வித்ய ஸம்பாஷா பரிஷத் கூட்டம் சென்ற 29—11—59 அன்று மாலை 3 மணிக்கு ஸ்ரீரங்கம் வைத்யபூஷண ஸ்ரீ P. G. கணபதி சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் திருச்சி ஆயுர் வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி ஆயுர்வேதாசாரிய அவர்கள் ச்வித்ரத்தின் நிதான சிகித் ஸைகளைப் பற்றி விரிவாகப் பேசினர். ஸபையின் ஆண்டு விழாவை 27—11—59 அன்று நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

சேலத்தில் பொதுக்கூட்டம்

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் சேலம் கிளையின் ஆதரவில் சேலம் நகரப் பொதுமக்களின் கூட்டம் நடைபெற ஏற்பாடாகின்றது.

சேலம் ஜில்லாவிலுள்ள மக்கட்பிரதிநிதிகளும் நகர மன்றத் தலைவர்களும் கலந்துகொள்கிறார்கள். விழாவைப் பற்றிய விவரங்களும் அழைப்பிதழ்களும் கூடிய சீக்கிரம் எல்லோருக்கும் அனுப்பப் பெறும்.

* *

சித்த வைத்ய சங்கம்

1959 ஆண்டு நவம்பர்-ஸ்ரீ 20-ௗ வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு பாண்டிச்சேரி 46, இரங்கப்பிள்ளை வீதியில் **சித்தவைத்ய சங்கம்** டாக்டர் D. ராஜேந்திரன் R. I. M. P. தலைமையில் ஆரம்பமாயிற்று.

டாக்டர் S. கிருஷ்ணசாமி அவர்கள் அகத்தியனார் படத்தைத் திறந்து வைத்தார்.

டாக்டர் ராஜேந்திரன் அவர்கள் சித்தர் கொடியை ஏற்றுவித்து சித்த வைத்திய சங்கத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார். இதில் பல வைத்யர்கள் கலந்து கொண்டனர்.

பிறகு அடியிற்கண்ட நிர்வாஹத்தினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் :	டாக்டர்	D. ராஜேந்திரன்
உபதலைவர் :	,,	M. கிருஷ்ணன்
காரியதரிசி :	,,	B. மாசிலாமணி
பொக்கிஷதார் :	,,	மோன்ஷேர் அந்துவார்
உபபொக்கிஷதார் :	,,	தெல்போர்ன்.

காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

ஆயுர்வேத சித்த யூனானி-இந்திய வைத்திய முறைகளின் விஷயமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற பொதுக்கூட்டம்.

ஈரோடு, 27—11—59.

இந்நகர் பெரியார் மன்றத்தில் 27-11-59 தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு உயர்திரு. E. M. அண்ணாமலை பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. பிரார்த்தனையும் வரவேற்பும் A. C. அச்சுதன் நாயரால் கூறப்பட்டது. பின் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி விரிவாக ஸ்ரீ V. B. நடராஜ

சாஸ்திரி, ஆயுர்வேதாசாரிய திருச்சி, (தலைவர், அகில இந்திய ஆயுர்வேத வித்தியா பீடம்.) எடுத்துரைத்தார். பின்னர் M. A. ஈச்வரன் (Ex.) M. L. A. அவர்களும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற தனது யோசனையைக் கூறுவதுடன் தன்னாலான சகாயம் செய்வதாகவும் கூறினார்.

உயர்திரு. க. ர. நல்லசிவம் M. L. A. ஊஞ்சலூர் அவர்கள் பேசியபோது தன்னால் முடிந்தவளவு தீர்மானத்துக்கு ஆதரவு தந்து மற்ற M. L. A. க்களையும் ஆதரவளிக்க வேண்டுவதாகவும் கூறினார்.

கோவை C. K. குமாரசாமி பிள்ளை அவர்கள் M. S. 2447-7-8-58, தேசிய சர்க்கார் ரிஜிஸ்திரேஷன் சட்ட விஷயமாக உள்ள சிக்கல் பூராவும் விரிவாகக் கூறியதுடன் அச்சட்டத்தை தள்ளி சீர்திருத்தம் வேண்டுமெனக்கூறினார். பின் திரு. மேகலை B, A. B, T. அவர்களும் D. G. தங்கராசனார் அவர்களும் இந்திய வைத்திய மேன்மை பற்றியும் பொதுமக்கள் ஆதரவுதர வேண்டுமெனவும் கூறினர்.

தலைவர் முடிவுரையில் தனது அபிப்பிராயத்தைக் கூறிய பின்னர் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

I. This meeting of the citizens of Erode, views with great concern that the College of Indian Medicine, started originally as a School with the avowed object of encouraging the systems of Indian Medicine by giving efficient training in them, has slowly been converted into a sub-standard Allopathic College in the name of College of Integrated Medicine, whereby the systems of Indian Medicine namely Ayurveda, Siddha and Unani have gradually lost their place in that College due to the policies adopted by the administrative heads, who were not conversant with the systems of Indian Medicine. Therefore, this meeting requests the Government of Madras:

(a) to reconvert the present College of Integrated Medicine into a full-fledged

College of Indian Medicine by revising the curriculam of Studies etc., suitable to the development of Indian Medicine as per original intensions;

(b) to give full encouragement and prope- status to the systems of Indian Medicines;

(c), separate the department of Indian Medicine and entrust the policy making and administration of the same to the experts in Indian Medicine, as the advancement of Indian Medicine is possible only by the votaries of those systems of Medicine.

II. This meeting requests the state Government to recognise the medical treatment given by the practitioners of the systems of Indian Medicine to all Government employees and thus enable them to get reimdursembnt as Allopathic treatment.

III. This meeting requests the Union Government to recognise the systems of Indian Medicine on a par with the Allopathic medicine with regard to State Insurance Scheme and accord the necessary facilities to the public to avail the medical services of the practitioners of Indigenous systems of Medicine under the State Insurance Scheme.

IV. This meeting requests the Government of Madras to modify the rules regarding the Registration of the hereditary practitioners of Indian Medicine in such a way as to enable all the hereditary practitioners of Indian Medicine, to get registration in consultation with the experts in

those systems of Indian Medicine. Till such consultation, the present G. O. No. Ms. 2447 dated 7—8—58 may be cancelled.

V. This meeting requests the Union Government to remove forthwith all controls and restrictions imposed on the (such as nutmeg cloves) on Indian Drugs, quite essential for the day to day manufacture of Indigenous Medicines.

முடிவில் ரா. ரங்கநாதன் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

சேலம் ஜில்லா கிளை அங்கத்தினர்களுக்கு அறிக்கையும் வேண்டுகோளும்.

நமது சங்கத்தினர் சிலர், குறிப்பாக நிர்வாகத்திலும் பங்கு கொண்டுள்ள அங்கத்தினர்களிலும் சிலர் இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கிறார்கள். சிலர் 1957 முதல் நாளதுவரையும் செலுத்தாமலிருக்கிறார்கள். அவர்கள் தயவு செய்து உடனடியாகவே டிசம்பர் முடிவதற்குள்ளாகவோ, செலுத்த வேண்டுகிறோம். அப்படி செலுத்தாதவர்கள் அங்கத்தினர்கள் பதவியிலிருந்து விலகிக் கொண்டதாகக் கருதி 1960-லிருந்து அவர்களுக்கு யாதொரு சங்க சம்பந்தமான அறிக்கைகளும் அனுப்பப் படமாட்டாதென்பதையும், ரிஜிஸ்டிரேஷன் சம்பந்தமான எவ்விதமான காரியமும் அவர்கட்குச் செய்யப்படமாட்டாதென்பதையும் இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வருடம் 1-க்கு சந்தா (தலைமை & கிளை) ரூ. 7—0—0.

சந்தா கீழ்க்கண்ட விலாசங்களில் ஒன்றுக்கு அனுப்பவும்.

R. K. பழனியப்பா,
காரியதரிசி,
11-B. தெய்வநாயகம்பிள்ளை தெரு,
சேலம்-2.

M. ராஜா பிள்ளை,
பொக்கிஷதார்,
கடை வீதி, சேலம்-1.

ஆராய்ச்சி வழி.

ஆயுர்வேத ஆராய்ச்சிக்கான வழிகளை வகுக்கும் பொறுப்பு தற்போது ஒரு புதிய குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் இதுகாறும் இவ்விஷயத்தில் செய்து வந்த ஏற்பாடுகளில் இக்குழு நியமனம் பொறுப்பும் வாய்ப்பும் மிகுந்ததாகும். ஆராய்ச்சிக்கான திட்டங்களை வகுக்கும்போது ஸாதனங்களிலும் முறைகளிலும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட வகையுண்டு. ஆனால் லக்ஷ்யத்தில் வேற்றுமைக்கிடமளிக்கக்கூடாது. அதனால் லக்ஷ்யம் எந்த உருவில் அமைய வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பு பொதுவாக வைத்ய சமூகத்திற்கும், தனிப்பட்டு அந்தக் குழு விற்கும் உண்டு.

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி எதற்கு என்ற கேள்வி முதலில் எழலாம். மேற்கத்திய நாடுகளில் பல்வேறு விக்ஞான நிபுணர்களின் பெருமுயற்சி யாலும் உழைப்பாலும் உருவாகி விரிவடைந்துள்ள நவீன வைத்யமுறை இன்று உலக வைத்ய முறையாகத் திகழ்கின்றது. அதன் ஆராய்ச்சி அபிவிருத்தித் துறைகளில் உலகெங்கும் உள்ள நிபுணர்கள் ஈடுபடுவதால் அத்துறைகளில் மேம்பாடு வெகு எளிதிலும் சீக்கிரத்திலும் அமைகிறது. இந்தியாவிலும் அரசாங்கத்தின் முழு ஆதரவு பெற்று மக்களுக்கு சேவை செய்கிறது. உலகெங்கும் நடக்கும் முயற்சிகளின் பலனை இந்தியா எளிதி லேயே பெற முடிகிறது. இது ஒரு பக்கமிருக்க;

இந்தியாவில் அனாதிகாலம் தொட்டு யுத்த காலத்திலும் சமாதான காலத் திலும் உதவிவந்துள்ள வைத்யமுறை ஒன்று உள்ளது. அதுதான் ஆயுர் வேதம் அல்லது சித்தம் என்ற பெயரால் வழங்கப்படும் நாட்டுவைத்ய முறை. ஒரு நூற்றாண்டுக்குமுன் வரை தேசத்தில் ஆரோக்கியம் இந்த வைத்யமுறை யாலேயே பாதுகாக்கப் பட்டுள்ளது. இன்றளவில் குரு சிஷ்ய பரம்பரையிலும் தந்தை-புத்திர பரம்பரையிலும் அதன் பல பகுதிகள் காப்பாற்றப்பட்டு அனுபவத்திலுள்ளன. விக்ஞான சாஸ்திர வளர்ச்சிக்கு அவசியமான நிபுணர் களின் ஆராய்ச்சி அரங்குகள் (தத்வித்ய ஸம்பாஷா பரிஷத்துக்கள்) நடை பெறுவதற்கேற்ற சூழ்நிலை தேசம் பிறர்க்கு அடிமையானதன் காரணமாக கடந்த ஓரிரு நூற்றாண்டுகளாகக் குலைந்து விட்டபடியால் விக்ஞான அபி விருத்தி குன்றியதுமட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகள் இன்று கவைக்குத வாது பொருள் புரியாது இருக்கின்றன. அந்த பகுதிகளில் தேர்ச்சியின்மை காரணமாக ஆயுர்வேதம் இன்று மக்களுக்கு யுத்த காலத்திலும் ஸமாதான காலத்திலும் எல்லாத்துறைகளிலும் தாம் புரிய வேண்டிய சேவையைச் செய்யத் தகுதியற்றிருக்கின்றது. இது இன்றைய அதன் சூழ்நிலை. இது மற்றொரு புறமிருக்க;

குரு சிஷ்ய பரம்பரையிலும் தந்தை – புத்திர பரம்பரையிலும் நம் காலத்து வைத்யர்கள் பெற்றுள்ள ஆயுர்வேத வைத்யத் தொழிற் பயிற்சி

இன்றும் மக்கள் உகந்து போற்றுமளவிற்கு உள்ளது. அவர்கள் எல்லாத் துறைகளிலும் வைத்ய உதவி செய்யும் வல்லமை பெற்றிராவிட்டாலும் அவர்கள் நன்கு பயின்றுள்ள துறைகளில் அவர்கள் அளிக்கும் உதவி மக்களுக்கு இன்று தேவையாக இருக்கிறது. மக்களின் அவசியத் தேவையை பூர்த்தி செய்யும் காரணமாகத்தான் இன்று அது நிலைத்து நிற்கிறது. இது வரை அரசாங்கம் அதற்கு அளித்த உதவியும் மதிப்பும் அதன் வளர்ச்சிக்கோ நிலைத்து நிற்பதற்கோ சற்றேனும் உதவியுள்ளதா என்பது ஐயப்பாட்டுக் குட்பட்டுள்ள விஷயம். அதன் தனிமதிப்பிற்கும் வளர்ச்சிக்கும் குந்தகமேற் படும்வகையில் தான் நேற்றுவரை அரசாங்கம் நடந்து வந்துள்ளது. இந்த நிலையிலும் மக்கள் அவ்வைத்ய உதவியை விரும்பிப்பெறுகின்றனர் என்றால் நவீன வைத்ய முறை அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யத் தகுதி யற்றிருக்கும் நிலையில், ஆயுர்வேதம் பூர்த்திசெய்கிறது என்ற ஒரு உண்மை விளங்குகின்றது என்பதில் சற்றும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இன்று ஆயுர்வேதத்திற்கான சூழ்நிலையையும் நவீன வைத்யத்திற்கான சூழ்நிலையையும் சற்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

(1) நவீன வைத்ய முறை ஒன்றுக்குத்தான் இன்று நாடு முழுவதும் படுக்கை வசதிகளுடன் கூடிய மாகாண-ஜில்லா-தாலூக்கா-நகர-கிராம அரசாங்க ஆஸ்பத்திரிகள் உள்ளன.

(2) இதற்குத்தான் ஒவ்வொரு ராஜ்யங்களிலும் எல்லா வஸதிகளுடன் கலாசாலைகள் உள்ளன.

(3) கோர்ட்டு வியவஹாரங்கள், சர்க்காரிலாகாக்களின் சிப்பந்திகளின் விடுமுறை அத்தாட்சி பத்திரங்கள், இன்ஷ்யூரன்ஸ், ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் போன்ற பல்வேறு ஸ்தாபனம் இவைகளில் அதிகாரம் நவீன வைத்ய முறைகளுக்கு மட்டும் உரித்தானது.

(4) நாட்டின் சுகாதார இலாகாவிற்கும் மருத்துவ இலாகாவிற்கும் நவீன வைத்யமுறையினரே அதிகாரிகள்.

(5) எல்லாவற்றையும்விட முக்யமான அதிகாரம்–பிற வைத்ய முறை களின் நடப்பு வளர்ச்சி சம்பந்தபபட்ட எல்லா அதிகாரங்களும் இன்றுவரை அவர்களது சக்திக்குட்பட்டவை.

(6) நாட்டின் சுகாதார வைத்யச் செலவில் 100-ல் 99 பங்குவரை இன்று இதுதான் பங்கு பெறுகின்றது. மீதமுள்ள ஒரு பங்கு நாட்டு வைத்ய முறைகளுக்காகச் செலவாகலாம் என்றாலும், இதன் நிர்வாஹத்திலும் நவீன வைத்ய முறை வைத்யர்களே முக்ய அதிகாரம் பெற்றிருப்பதால் பெயரளவிற் குள்ள இந்த ஒரு சதவிகிதத்திலும் முழு உதவியையும்கூட ஆயுர்வேதமோ வேறு நாட்டுமுறையோ பெற முடியாது.

இவ்வளவு அந்தஸ்திலும் ஆதரவிலும் தாரதம்யமிருந்தும் ஆயுர்வேதம் மக்களுக்கு எவ்வளவு அவசியமாயிருக்கின்றதென்பதை, ரயில்வே தபால்-

தந்தி இலாகா, சர்க்கார் அதிகாரிகள் மற்ற பாக்டரிகள் இவைகளிலுள்ள சிப்பந்திகள் விஷயத்தில் பரீக்ஷை செய்து பார்க்கலாம். இவர்களுக்கென அரசாங்கமும் ஸ்தாபனங்களும் இலவசத்தில் வைத்திய உதவி அளிக்கின்றன. இவர்கள் தனிப்பட்ட நவீன வைத்யர்களிடம் வைத்ய உதவி பெற்ருலும் நோயாளி செலவழித்த அதற்கான மருந்துச் செலவை சர்க்காரோ ஸ்தாபனங்களோ திருப்பித் தந்து விடுகின்றன. ஆக எல்லாவிதத்திலும் உயர்தர மருத்துவ வசதியை இலவசமாக சர்க்கார் கொடுக்க முன்வரும் போது கூட, சொந்தப் பணத்தைச் செலவழித்துக்கொண்டு, லீவு முதலிய வசதிகள் நிர்பந்தமாக பெறமுடியாமலிருந்தால் கூட ஆயுர்வேத வைத்தியர்களிடம் வந்து இவர்கள் சிகித்ஸை பெற வருகின்றனர் என்ருல், ஆயுர்வேதத்திலுள்ள மேன்மையோ, அல்லது நவீன வைத்யத்தில் உள்ள குறைபாடோ தான் காரணமாகவேண்டும். இதை ஆயுர்வேதத்திடமுள்ள மேன்மையாகவோ மற்ற முறையின் குறைபாடாகவோ எப்படியேனும் ஏற்றுக் கொள்வோம். மக்களின் சுகாதாரத்தேவை பூர்த்திக்கு நவீன வைத்யம் போதவில்லை என்பதுதான் கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.

ஆகவே, ஆயுர்வேதத்தையும் மற்ற நாட்டு வைத்ய முறைகளையும் வளர்ப்பது நாட்டின் தேவைக்கவசியமாகிறதென்பதை சோப்ரா கமிட்டி முதல் உடுப்பா கமிட்டி வரையிலுள்ள எல்லா கமிட்டிகளும் அரசாங்கத்திடம் வற்புறுத்திவந்துள்ளன. இந்த சிபார்சுகளின் காரணமாகவே மத்ய அரசாங்கம் ஜாம் நகரில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தையும் மேற்படிப்பு ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையான சில அரசாங்க ஆதரவுகளும் நன்கு பயன்படுவதென்பது தற்போதுள்ள கனம் கர்மார்க்கர் போன்ற ஆயுர்வேதாபிமானிகளான மந்திரிகள் அதிகாரத்திலிருக்கும்போது தான். அதனுல்தான் ஆயுர்வேத ஆராய்ச்சி விஷயமாக இந்தக் காலத்தில் செய்யும் ஏற்பாடுகள் நல்ல அடிப்படையில் நல்ல லக்ஷ்யத்தைக் கொண்டு, நல்ல வழியில் அமைக்கப்படவேண்டுமென்று நாம் விரும்புகிறேம்.

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி எந்த லக்ஷ்யத்தில் அமைக்கப்பெறவேண்டும் என்ருெரு பிரச்னை. மருத்துவ விக்ஞானத்தில் செய்யப்படும் ஆராய்ச்சிக்கு முக்ய லக்ஷ்யம் மக்களுக்கு நல்ல மருத்துவ உதவியளிப்பதுதான் என்பதில் ஐயமில்லை. ஆயுர்வேதத்தில் செய்யப்படும் ஆராய்ச்சிகளின் பயனை மற்ற வைத்யமுறைகளோ, உலகில் வேறு பாகங்களில் இருக்கும் நோயாளிகளோ அனுபவிக்கக்கூடாதென லக்ஷ்யமிருக்கமுடியாது. ஆனுல் ஆயுர்வேதத்திற்கு உதவும் வகையில் அது அமையப்பெற்று மக்களுக்கு நல்ல உதவியளிப்பதாக அமையவேண்டுமென்ற லக்ஷ்யம்தான் நியாயமான லக்ஷ்யமாகும். அதாவது **இவ்வாராய்ச்சி உண்மையில் ஆயுர்வேதத்திற்கு உதவுவதாக அமையவேண்டும் என்றும், நவீன வைத்யமுறையில் உள்ள பார்மகோபியாவில் சில மருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய மட்டும் அது உதவுவதாக இருக்கக் கூடாது என்றும் நாம் கொள்ளலாம்.** இந்த லக்ஷ்யத்

சென்னை-600 008.

தைப் பற்றி ஒவ்வொரு வைத்யரும் சிந்தித்தல் அவசியமாகின்றது. சிந்திக்கச் சிந்திக்கத்தான் லோகஹிதமான ஆயுர்வேதஹிதமான வழி புலப்படும்.

ஆயுர்வேதம் மக்களுக்கு பிற வைத்யமுறைகள் உதவாத துறையில் உதவுவதாகக் காண்கிறோமே அது எதனால்? என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். ஆயுர்வேதத்திலுள்ள மருந்துப் பொருள்களின் சக்தியாலா? அல்லது வைத்யனின் சாமர்த்தியத்தாலா? இவ்விரண்டின் சக்தியால் மாத்திரமல்ல. பின் என்ன? ஆயுர்வேதத்தின் தனிப்பட்ட சிகித்ஸை வழியால், அது வகுத்துக்கொண்டுள்ள சித்தாந்தங்களால், அது கண்டுபிடித்துள்ள—திரிதோஷ–ரஸ–வீர்ய–விபாக-பிரபாவ தத்துவங்களால். மருந்துகளின் சக்தியையோ வைத்யனின் சாமர்த்தியத்தையோ வேறுமுறை மருந்துகளும் வைத்யர்களும் பெற முடியும். திரிதோஷம் முதலிய சித்தாந்தங்களையும் அதன் வழியிற் செல்லும் சிகித்ஸையையும் மற்ற வைத்ய முறைகள் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக் கொண்டதும் அவையும் ஆயுர்வேதமாகி விடும். சுக்கு அலோபதி முறையிலோ ஆயுர்வேத முறையிலோ உபயோகிக்கும்போது ஒரே குணத்தைத்தான் தரும். ஆனால் அந்த குணத்திற்குக் காரணம் காணும் விமர்சம் இவ்விருமுறைகளுக்கும் தனிப்பட்டது. இவ்வகையிலேயே பெனிஸிலினை அலோபதியினர் உபயோகிப்பதற்காகவோ, ஆயுர்வேத வைத்யர் உபயோகிப்பதற்காகவோ குணவேற்றுமை ஏற்பட முடியாது. ஆனால் எந்த நோக்கில் அதை உபயோகித்தனர் என்பதே விமர்சம். கபஜ்வரத்தில் கபத்தில் காணும் பல்வேறு கிருமிகளைக் கொல்ல வல்லதாக அலோபதி வைத்யர் காணும் விமர்சமும், கபத்தின் தோஷ நிலையில் ஏற்படும் பூதி–க்லேத-ஸ்ரோதோரோத குணங்களை மாற்றும் வகையில் காணும் ஆயுர்வேத வைத்யன் காணும் விமர்சமும் வேறுபட்டதே. இவ்விரு திருஷ்டிகளின் தனிப்பட்ட தன்மையே இவ்விரு முறைகளையும் அதனதன் வழியில் ஆராய்வதன் அவசியத்தை வற்புறுத்துகின்றன. **"ந ஹி கிஞ்சித் அநௌஷதம்"** என்ற ஆசார்ய ஸூக்திகள் என்றும் பொய்க்காதவை. அதனால் ஆயுர்வேத முறையில் கண்டுள்ள மருந்துகள் நன்கு ஆராயப்பட்டு அலோபதி முறையினராலோ, அலோபதி முறையில் கண்டுள்ள மருந்துகள் நன்கு ஆராயப்பட்டு ஆயுர்வேத முறையினராலோ உபயோகப்படுத்தப் படுவதில் ஆக்ரஹமோ ஏற்றத்தாழ்வோ ஏற்பட நியாயமில்லை. அதனால் நாம் ஆராய்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது ஆராய்ச்சி ஆயுர்வேதத்திற்கு உண்மையில் உதவுவதாக இருக்கவேண்டும் என்றும், அலோபதியில் ஓரிரு மருந்து எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய மாத்திரம் பயன்படுவதாக இருக்கக் கூடாதென்றும் கூறும்போது ஒருமுறை மருந்தை மறுமுறையினர் உபயோகிக்க வழி ஏற்படக்கூடாதென்று கூற விரும்பவில்லை. இவ்வகை ஆராய்ச்சி இதுவரை நடந்துகொண்டுதான் வருகிறது. கர்னல் சோப்ரா, ஸ்ரீ போஸ், ஸ்ரீ கணநாதஸேன் முதலானோர் இத்துறையில் பல அரிய சேவைகளைச் செய்திருக்கின்றனர். அதன் வாயிலாக நவீன வைத்யமுறை பார்ம

கோபியாவிலும் ஆயுர்வேத பார்மகோபியாவிலும் சேர்ந்துள்ள ஸர்பகந்தா, ஸோமலதா, ஜடாமாஞ்சி, மரவெட்டி, கார்போகரிசி முதலிய பல்வேறு மருந்துச் சரக்குகளால் மருத்துவ ஸேவையில் ஏற்பட்டுள்ள உதவி கணக்கிலடங்காதது. ஆனால் ஆயுர்வேதச் சரக்குகளான ஸர்பகந்தா ஸோமலதா போன்றவைகளை நவீன வைத்தியர்கள் தம் வழியில் ஆராய்ந்து பயன்படுத்திக் கொண்டதால் ஆயுர்வேதம் தன் ஆத்மசக்தி வளர்ச்சியில் ஏதாவது பயன் பெற முடிந்ததா? என்ற கேள்விக்கு இல்லை என்பதுதான் பதில். ஆக, தற்போது செய்யவிருக்கும் ஆராய்ச்சிகளால் இத்தகைய பயனே ஏற்படும் என்றால் அது பயனற்றது என்று தான் குறிப்பிடவேண்டும். உலக மக்களுக்கு அதிக உபயோகம் ஏற்பட்டதல்லவா என்ற சமாதானம் தற்போது சரியாகாது. இதை அலோபதித் துறையில் செய்யப்படும் ஆராய்ச்சிச் செலவிலேயே செய்துகொள்ள முடியும். நம் நாட்டினரைவிட இதுவரை இத்துறையில் கூட வெளிநாட்டினர் செய்துள்ள ஆராய்ச்சிதான் சிறந்து விளங்குகின்றது. அதனால் இத்துறை ஆராய்ச்சிக்கென செலவழியும் சிறிதளவு தொகையையும் இவ்வழியில் உபயோகப்படுத்த வேண்டாவென்றே நாம் கருதுகிறோம்.

ஆயுர்வேதத்தை ஆயுர்வேத முறையில் ஆயுர்வேதத்திற்கு ஹிதமளிப்பதற்காகவே வளர்ப்பதில் அதிக லாபமில்லை என்றும் சிலர் கூறலாம். அதாவது ஆயுர்வேதவைத்யர்களுக்கு ஆயுர்வேத மருந்துகளைப் பற்றிய விமர்சமோ தோஷதூஷ்ய விமர்சமோ தேவையில்லை. உதாரணமாக "சுக்குத்தூளை மோரில் கலந்து கொடுக்க வயிற்றுப் போக்குக் கட்டுப்பட்டது" என்பதை ஆராய்ச்சி மூலம் தெரிந்த பிறகுதான் ஆயுர்வேத பண்டிதர்கள் அவ்வுண்மையை ஏற்பார்கள் என்றில்லை. இவர்கள் சாஸ்திரங்கள் தெரிவிப்பதனைத்தும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் மனத்தினர். அல்லது ஆராய்ச்சி மூலம் வெளியாகும் போதும் "இது என்ன புதிய விஷயம்? தெரிந்ததுதானே!" என்று சொல்லி உதாஸீனமாயிருக்கலாம். அலோபதி வைத்யர்களோ, "அப்படியா......! பேஷ்; இதை நாமும் ஏற்று உபயோகிக்கலாம்" என முற்படலாம். அதனால் இவ்வாராய்ச்சியின் பயன்களை அவர்களது பாஷையில் அவர்களது வழியில் நடத்தித் தெரிவிப்பதல்லவோ அவசியம்! இது அல்லவோ இன்றைய தேவை? என்று அவர்கள் கருதுகிறார்கள். இது இந்திய மனப்பண்பிற்கு ஏற்ற வழியே. பிறர்க்குதவும் பணியில் தம்மையே அழித்துக் கொள்ளும் வழி. தனது ஆத்மசத்தியை அழிவற்றதாகச் செய்து கொண்டு பிறர்க்கு உதவும் வழியும் இந்திய மனப்பண்பிற்கு உகந்ததே. இந்த இரண்டாம் வழியையே 'தனக்கு மிஞ்சி தானதர்மம்' என்றும், சுவற்றை வைத்தே சித்திரம் எழுதுவோம் என்றும் கொள்கையாக கடைபிடிக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆயுர்வேதம் நிலைத்துநிற்க இவர்கள் கூறும் வழி உதவாது என்பதை முன் பாராவில் தெரிவித்துவிட்டோம். ஆனால் "ஆயுர்வேதத்தை ஆயுர்வேத முறையில் ஆராய்வதில் ஆயுர்வேத வைத்யர்களுக்கு ஊக்கமிருக்காது. தெரிந்ததுதானே என்ற உதாஸீன

புத்தி ஏற்படலாம்'' எனக் கருதுவது மாத்திரம் அவர்கள் செய்யும் பெருந் தவறு.

தெரிந்ததைக்கொண்டு தெரியாததை அறிய முற்படுவதுதான் விக்ஞானிகள் வழி. தமக்குத் தெரியாததை பிறர் அறிந்துகொண்ட வழியின்மூலம் பரிசீலித்து அறிந்துகொண்டதாக பாவனை செய்வது சோம்பேறியின் வழி. இன்று ஆயுர்வேத ஆராய்ச்சி சோம்பேறி வழியிலேயே செல்கின்றது. ஆயுர்வேதத்திலுள்ள விஷயங்கள் அலோபதிக் கண்களில் புரிந்துகொள்ளப் படுவதும் அவ்வழியில் விவரணம் காண்பதும் இன்றைய ஆராய்ச்சிகளின் தகிடுதத்த வழி. அலோபதி விக்ஞானத்தின் தவறுதலாலோ அல்லது அவ் விக்ஞானத்தை அறிந்தவகையிலுள்ள தவறுதலாலோ ஆயுர்வேதத்தின் ஒருபாகம் முரண்பட்டதாகக் காணப்பட்டால், இது விக்ஞான ஸங்கதமல்ல என்று ஒதுக்கும் மனப்பான்மையை வளர்க்கும் விக்ஞான சோம்பேறி வழி. இந்தச் சோம்பேறி வழி தாற்காலிகமாக, நம்மை ஏமாற்றிக்கொள்ளவும் ஓரளவு பிறரை ஏமாற்றவும் உதவலாம். ஆனுல் உண்மையான அபிவிருத்தி எதுவோ அதின் ஆரம்ப காலத்திய இடையூறுகளையும் சிரமங்களையும் பொருட்படுத்தாது இறங்குவதுதான் நல்லது.

தெரிந்ததைக்கொண்டு தெரியாததையறிய நம் வழியிலேயே செல்வது தான் உயர்ந்தது. நமது அன்றுடத்தொழிலனுபவத்தில் நமது திரிதோஷ–ரஸ-வீர்ய-விபாக-ப்ரபாவாதி தத்துவங்களின் பரிசயம் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகின்றது. இவ்வறிவால் ரோகத்திற்கும் ஔஷதத்திற்கும் உள்ள தொடர்பையும் அறிய முடிகின்றது. இது ஓரளவில் ஸ்தூலதசையில், சாஸ்திரங்களின் பரிசயபலத்தால் ஏற்படும் ஞானம். சாஸ்திரம் என்னும் கண்கொண்டு சாஸ்திரத்தில் கண்ட சுக்கின் தன்மையையும் நோயின் தன்மையையும் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவு இது. ஆனுல் சாஸ்திரத்தில் கண்டறியாத அல்லது கண்டறிந்ததாக நாம் அறியாத ஒரு பொருளின் தன்மையையும் ரோகத்தின் தன்மையையும் சீர்தூக்கிப் பார்க்க இது இன்று பூர்ணமாகப் பயன்தருவதாக இல்லை. அதற்கு விக்ஞான ஸித்தாந்தங்களை நாமே நமது அகக்கண்–விக்ஞானக் கண்கொண்டு பார்க்கத் தகுதி பெருதது தான் காரணம். இவ்வறிவு பெற்றுல் உலக விஞ்ஞானமான நவீன விஞ்ஞானம் இதுகாறும் கண்டறிந்த வழிகளைப்போல நாமும் எல்லாத் துறைகளிலும் தனிவழிகளைக் காணமுடியும். ஆயுர்வேதம் தனித்து நிலைத்து நிற்கவும் முடியும். ஆயுர்வேதத்தை உலக விக்ஞானமாக்கவும் முடியும்.

ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களை ஆயுர்வேத வைத்யர்களே நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அதற்கே முதலில் ஆராய்ச்சி விமர்சனமும் தேவை. இதை அலோபதி வழியில் செய்வதில் ஆயுர்வேத வைத்யனுக்குப் பயனில்லை. அடிப்படைத் தத்துவங்களுக்கும் அன்றுடப் பழக்கத்திற்கும் உள்ள தொடர்பை விவரித்து அறிய ஆராய்ச்சி தேவை. இவ்வகையிலே ஆராய்ச்சி உதவி புரிந்தால்தான் வைத்யனும் ஆயுர்வேதத்தைப் பூர்ணமாக

அறிய முடியும். அவ்விதம் ஆயுர்வேதம் முழுவதும் அறியப்பட்டபின் அதை வெளியினரும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதையே அவர்கள் தம தாக்கிக் கொள்ளவும் கூடும். இவ்வழியில் செல்வதற்கான பாதை அமைக்கவும் சாதனத்தைப் பெறவும் இவ்வாராய்ச்சிக்குழு வகை செய்யவேண்டு மென்பதே நமது அவா. பாதை அமைப்பது நிபுணர்களின் பொறுப்பு; சாதனத்தை அளிப்பது அரசினரின் பொறுப்பு; இவ்விரு பொறுப்பாளிகளையும் ஓரிடத்தில் சேர்த்து இயக்குவது இவ்வாராய்ச்சிக் குழுவின் பொறுப்பு. இதை அடிக்கடி அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதையே நமது கடமையாக நினைக்கிறோம்.

ஆக ஆயுர்வேத ஆராய்ச்சி விஷயமாகக் கடைபிடிக்கும் வழிகளிலும் வகுக்கப்படும் கொள்கைகளிலும் ஆயுர்வேதம் தனித்து வளர்வதற்கேற்ற சூழ்நிலை ஏற்படுவதே முக்கிய லக்ஷ்யமாயிருக்க வேண்டும் எனக் கூறுவதை யாரும் மறுதளிக்க முடியாது.

ஆராய்ச்சி எவ்விதம் செய்யப்படவேண்டும்? ஆராய்ச்சியை மூன்று பிரிவுகளில் உட்படுத்தலாம். (1) கிரந்த ஆராய்ச்சி, (2) சிகித்ஸை வழி ஆராய்ச்சி, (3) ஔஷத ஆராய்ச்சி என.

கிரந்த ஆராய்ச்சி: ஆயுர்வேத ஆராய்ச்சியின் முதற்படி இதுவே. ஆராய்ச்சியாளரின் முதற்காரியம்— இருப்பதை ஒழுங்கு படுத்தி, உள்ளவை எவை? உள்ளவைகளில் பரிசயத்தில் இருப்பவை எவை? பரிசயத்தில் கொண்டுவர வேண்டியவை எவை? என்ற வகையில் பாகுபடுத்தி ஆராய்ச்சிக்கான அஸ்திவாரத்தைச் சீரமைத்துக் கொள்ள வேண்டியதாகும். ஆயுர்வேதத்தில் செய்யப்படும் ஆராய்ச்சியில் பெரும் பங்கு அல்லது முழுப் பங்கும் கூட இருப்பதை அறிவதில் இன்று ஊக்கத்துடன் இறங்குவதேயாகும். புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டியவையாக ஏதாவது இருக்கிறதா என்பதை, இருப்பதை அறிந்து முடிந்த பின்னரே நிச்சயிக்க முடியும்.

ஆயுர்வேத நூல்கள் இன்று மூன்று பிரிவுகளில் கிடைக்கின்றன. (1) ஆயுர்வேத விஷயங்களையே முக்கிய விஷயங்களாகக் கொண்ட சரகஸம்ஹிதை, ஸுச்ருதஸம்ஹிதை முதலிய ஸம்ஹிதாக்ரந்தங்களிலிருந்து இன்று பல்வேறு விஷயங்களில் நவீன ஆயுர்வேத ஆசிரியர்களால் வெளியிடப் பட்டுள்ள நூல்கள் ஈறாக உள்ள ஆயுர்வேதக்கிரந்தங்கள்.

(2) வேதம், புராணம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், இதிஹாஸங்கள் முதலிய நூல்களில் ஆங்காங்கு ஆயுஷ்யமாகவும் ரோகஹரமாகவும் காணப்படும் உபதேசங்கள்.

(3) பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் ஓரளவு சாஸ்திரத்திலும், மிகுதியாக அனுபவத்திலும் விவரணங்களும் புது வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டு அந்த அந்த பிராந்திய மொழிகளில் ஆக்கப்பட்டுள்ள நூல்கள். (சித்த

வைத்ய நூல்கள் எனத் தமிழ் நாட்டிலும் ஆந்திரத்திலும் ராஜஸ்தானிலும் வெகுவாகக் காணப்படுபவை இப் பிரிவைச் சேர்ந்தவை.)

இவைகளில் உள்ள அம்சங்களையெல்லாம் விஷயவாரியாகத் தொகுத்துப் புதிய நூல்கள் எழுதியும் அவைகளில் ஸம்சயமின்றி உடன் கையாளக் கூடியதைத் தனியாகப் பிரித்தும், மேலும் ஆராய்ச்சி தேவையுள்ள பாகங்களைத் தனியாகப் பிரித்தும் வெளியிடுதல், நன்கு தெளிந்த அம்சங்களில் விஷய வாரியாக அமைக்கப்பட்ட புத்தகங்களினின்று இந்தியாவில் நடந்து வரும் ஆயுர்வேத கலாசாலைகளில் மாணவர்களுக்கு போதிக்க ஏற்ற வகையில் பாட புத்தகங்கள் எழுதுவது; பிறகு ஆராய்ச்சி மூலம் ஸம்சயமுள்ள பகுதிகளில் தெளிவு பெறப்பெற அவைகளையும் பாட புத்தகங்களில் அவ்வப்போது சேர்த்து வருவது; இப் புத்தகங்களை ஆயுர்வேதத்தின் பொது மொழியான ஸம்ஸ்கிருதத்தில் முதலில் தொகுத்தும் பிறகு பிராந்தீய மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழி பெயர்த்தும் வெளியிடுதல்; இவை இந்த கிரந்த ஆராய்ச்சிப் பகுதியில் செய்யப்படவேண்டியவை.

இது தவிர ஆயுர்வேதத்திற்குப் பல துறைகளில் மிக நெருக்கமான தொடர்புள்ள யூனனி முறைகளிலிருந்தும் ஸம்பந்தப்பட்ட கிரந்தப் பகுதிகளை விஷய வாரியாகப் பிரித்துத் தொகுத்தல், சிகித்ஸை வழி ஆராய்ச்சிப் பகுதியிலும், ஔஷத ஆராய்ச்சிப் பகுதியிலும் ஆயுர்வேத மூல ஸித்தாந்தங்களுக்கேற்ப ஆராய்ந்து ஆயுர்வேத ரீதியில் இணையக்கூடியதாகத் தேரிய விஷயங்களை ஆயுர்வேத பரிபாஷையில் எழுதிச் சேர்ப்பது-இவையும் இப் பகுதியையே சாரும். இந்தப் பகுதி ஆயுர்வேத ஆராய்ச்சியரங்கில் முக்ய ஸ்தானம் பெற்றிருக்கும்.

சிகித்ஸை வழியாராய்ச்சி : இது இருவகைப்படும். ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றியது ஒன்று; மற்றொன்று வியாதித் தடுப்பு, வியாதி சிகித்ஸை என்ற தொழிற் பயிற்சியில் உதவும் சிகித்ஸாக்ரம ஆராய்ச்சி யாகும்.

(i) ஆயுர்வேதத்திற்கென தனிப்பட்ட தந்திர-யுக்திகளும் பிரமாண ப்ரமேய ஸித்தாந்தங்களும் உள்ளன. பாரதீய தர்சனங்களில் ஆயுர்வேத தர்சனம் தனித்து உள்ளது. இதற்கும் கொள்கை விஷயத்தில் வேற்றுமைகள் உண்டு. நியாயம் வைசேஷிகம் முதலிய இதர தர்சனங்களுக்கும் கொள்கை விஷயத்தில் வேற்றுமைகள் உண்டு. ஆனால் நியாயம் முதலிய தர்சனங்களைப் போல இதில் பிரகரண க்ரந்தங்களும் விவரண-வாதக் கிரந்தங்களும் ஏற்படாததால் பரிஷ்காரம் பூர்ணமாக ஏற்படவில்லை. ஆகையால் ஆயுர்வேத தர்சனத்தை மற்ற தர்சனங்களில் உள்ள வாதக் கிரந்தங்களின் உதவி கொண்டு நன்கு பரிஷ்கரித்து அதன் தர்சன அமைப்பைச் சீர்செய்தல் மிகவும் முக்கியமாகும். இதன் அடிப்படையில் தான் ஆயுர்வேத ப்ரமேயங்களான தோஷ தூஷ்ய மல-ரஸ-வீர்ய-விபாக-ப்ரபாவ ரோகாதி விக்ஞானம் அமைந்துள்ளது. தோஷம்

முதலியவைகளின் ஆராய்ச்சியிலும் வெளிநாட்டு முறைகளை ஆயுர்வேதத்துடன் இணைக்கும்போது ஆயுர்வேத திருஷ்டியில் அவைகளைப் பரிசீலனை செய்யவும் இவ்வாராய்ச்சி பெரிதும் உதவும்.

(ii) நோய்களை வராமல் தடுத்து நல்ல ஆரோக்கிய நிலையைப் பாது காப்பது, நோய்கள் வந்தபின் அவைகளை சரீரக்கூற்றுக்கு ஊறு விளையாது போக்குவது என்ற இரண்டு பிரிவுகளில் ஆயுர்வேத சிகித்ஸை பிரிகின்றது. முதல் பிரிவில் சரீரம் மனது ஆத்மா இவைகளின் அரோக நிலை, ஜாங்கலம் ஆனூபம் ஸாதாரணம் என்ற தேசப்பிரகிருதியையும் தனி மனிதனின் உற்பத்தி காலத்தில் வாத–பித்த கபங்களின் சேர்க்கை வைஷம்யம் காரணமாக தேகவாகு அமைப்பில் ஏற்படும் விசேஷ மாறுதல்கள் (பிரகிருதி விக்ஞானம்) காலத்தில் ருது முதலிய நிலைகளால் ஏற்படும் மாறுதல்கள் இவைகளுக்கேற்ப ஆரோக்கிய பரிபாலனத்தில் கவனிக்கப்படவேண்டிய விசேஷங்கள் ஆயுர்வேதத்திற்குத் தனிப்பட்டவை. தொத்து நோய்கள் பரவாமல் தடுப்பதும், விஷக் காற்று முதலியவைகளால் திடீர் திடீரென கொள்ளை நோய் வருவதைப் போக்க அகதங்களின் உபயோகம் இவைகளின் விக்ஞானம் இன்று அவசியம் ஆராயத் தக்கது. தோஷ தூஷ்ய மலங்களின் பிரகிருதி விக்ஞானம், தோஷாதிகளை பிராகிருத நிலையில் காப்பாற்றக் கையாள வேண்டிய ரஸாயன–வாஜீகரண சிகித்ஸா விக்ஞானம், இவைகளை தேச கால பிரகிருதிகளின் வேறுபாட்டிற்கேற்ப அமைத்தல் இவை இப் பிரிவில் அடங்குபவை.

(iii) வியாதி வந்தபின் தடுக்கும் சிகித்ஸை என்னும் பிரிவில் தேச கால பிரகிருதிகளின் மாறுபாட்டிலும் தனி மனிதன் தனது ஆஹார விஹாரங்களில் செய்யும் பிழைகளாலும் ஏற்படும் நோய்கள், அதற்குக் காரணமாகவும் சிகித்ஸையின் ஆதாரமாகவும் ஆயுர்வேதம் கண்டுள்ள தோஷ-தூஷ்ய-மல-விக்ருதி விக்ஞானம், வியாதி ஹேது-ஸ்வரூப-விக்ஞானம், வியாதியாகிய தோஷ தூஷ்ய ஸம்மூர்ச்சனையைப் பிரித்து அவைகளைப் பிரகிருதி நிலைக்குக் கொணரும் சோதன-சமன-சிகித்ஸா மார்க்க விக்ஞானம், இவ்விரு நிலைகளையும் பரீக்ஷிக்க உள்ள பரீக்ஷா ஸாதன விக்ஞானம், இவ்விஷயங்களில் ஆயுர்வேதம் கண்டுள்ள வழிகள் இன்று அனுபவத்திற்கு வருவதாயும் யுக்திக்குட்பட்டதாயும் பிரயோகத்திற்கு எளிதாயும் உள்ளனவா என பரிசோதித்தல்; இந்த பரிசோதனையில் தேர்ந்தவைகளை ஏற்றுக் கொள்ளுதல், பரிசோதனையில் உடன் தேராதவைகளை மேற்கொண்டு பரிசோதனை செய்துகொண்டிருத்தல் - இவை அவசியமாகின்றன.

ஆயுர்வேத மூல தர்சன ஸித்தாந்தங்களின் ஆதாரத்தில் இப்பரீக்ஷைகள் நடைபெற வேண்டியிருக்கின்றன. நவீன விக்ஞான ஸாதனங்களின் உபயோகம் ரூக்ஷ-ஸ்நிக்த-கௌரவ-லாகவ- உஷ்ண-சீதாதிகளைப் பரிசீலனை செய்யவும் பெரிதும் பயன்படலாம். ஆயுர்வேத மூல தர்சன ஸித்தாந்தங்களின் ஆராய்ச்சியிலேயே ஒருக்கால் நவீன விக்ஞானங்கள் பெரிதும் பயன்

படலாம். ஆனால் இவைகளை ஆயுர்வேத மூல தர்சன ரீதியில் அறிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். ஆகையால் இவ் வழியில் ஆராய்ச்சி செய்யவிருக்கும் ஆயுர்வேத நிபுணர்களில் சிலரையாவது நவீன மூல விக்ஞானங்களிலும், நவீன வைத்ய விக்ஞானங்களிலும் தேர்ச்சி பெற வசதியளித்து, அவர்களை இவ்வகையாராய்ச்சிகளில் பயன்படுத்திக் கொள்வது நல்ல வழி. ஆயுர்வேதமறியாது, நவீன மூல விக்ஞானங்களிலோ, நவீன வைத்ய விக்ஞானத்திலோ தேர்ந்தவர்களை இவ்வாராய்ச்சியில் பயன் படுத்திக் கொண்டால், ஆயுர்வேத மூல தர்சன ஆராய்ச்சியிலும் ஆயுர்வேத சிகித்ஸா க்ரம ஆராய்ச்சியிலும் விசேஷ பலன் ஏற்படாமல் போகலாம். இவ்வகையாராய்ச்சிக்கு, தேச கால பிரகிருதி வேறுபாடுகளை நன்கு அறிய உதவும் வகையில் நாடெங்கும் ஆஸ்பத்திரிகள் அமைப்பதும் அவசியம்.

(iv) ஔஷத ஸ்கந்த விக்ஞானம்: சிகித்ஸையில் உபயோகிக்கப் படும் மூலிகை-ரஸௌஷதங்கள்-முதலியவைகளின் ஸ்வரூபம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாற்றுப் பெயர்களிலும் மாற்றுருவத்திலும் கிடைக்கும் பொருள்களின் ரஸ-வீர்ய-விபாக-பிரபாவ விக்ஞானம், அவைகளின் ஸ்வரூப நிர்தாரணம், கஷாயம், சூர்ணம், லேகியம், மாத்திரை, ஆஸவம் போன்ற ஔஷத கல்பங்கள், இவைகளின் உபயோகத்தால் சரீரத்தின் பிர கிருதி-விகிருதி நிலைகளில் ஏற்படும் மாறுதல்கள், இவைகளை ஆயுர்வேத மூல ஸித்தாந்தங்களின் அடிப்படையில் ஆராய்தல், இவ்வகை ஆராய்ச்சியில் ஏற்படும் அனுபவம் வேறு வைத்ய விக்ஞானங்களில் புதிதாகக் கண்டுபிடிக் க்கப் பட்டுள்ள மருந்துகளையும் சிகித்ஸா க்ரமத்தையும் ஆயுர்வேத ரீதியில் ஆராயவும், அவ்விதம் ஆராய்ந்து தேருவதைத் தமதாக்கிக் கொள்ளவும் உதவும். இந்த ஆராய்ச்சி இல்லாமலேயே நவீன மருந்துகளையும் சிகித்ஸா க்ரமங்களையும் பயன்படுத்திக் கொள்ளுதல் சரியல்ல.

இந்த ஆராய்ச்சிகளில் பயனுள்ளவைகளாகக் கண்ட அம்சங்களில் விரிவுரைகளுடன் பாட புத்தகங்களாக அமைத்துக் கொடுக்கவேண்டும். ஆராய்ந்து கொண்டிருக்கக் கூடியவைகளையும் நிச்சயமான பிரயோக பரீக்ஷை செய்யாதவைகளையும் மூல கிரந்தங்களில் உள்ளபடியே போதித்து பொதுவான அறிவு ஏற்படச் செய்வது அவசியமே. இதனால் பின்னர் இவ் விஷயங்களில் ஆராய்ச்சி மூலம் விளக்கம் ஏற்படும்போது அவைகளை ஸுலபமாக ஏற்றுக்கொள்ள முடியும்.

ஆதலால் ஆயுர்வேதத்தை ஆயுர்வேத வழியிலேயே ஆராய்வதும் அதன் வளர்ச்சியின் மூலம் தேச ஹிதத்திற்காக சிறந்த பணியாற்றுவதும் லக்ஷ்யமாக அமைய வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

திருச்சி ஆயுர்வேத ஸபை ஆண்டு விழா

திருச்சி ஆயுர்வேத ஸபையின் 26-வது ஆண்டு விழா நாளது 27—12—59 ஞாயிறு காலை 9-30 மணிக்கு திருச்சி சின்னக்கடைத் தெருவில் வைத்ய பூஷண ஸ்ரீ P. G. கணபதி சாஸ்திரி அவர்கள் தலைமையில் நடைபெறும், காலை 9-30 மணிக்கு "பஸ்தி சிகித்ஸையின் சிறப்பு"

(तस्माच्चिकित्सार्धमिति प्रदिष्टः कृत्स्ना चिकित्सापि च बस्तिरेकैः)

என்ற விஷயத்தைப் பற்றி உபன்யாஸமும் சர்ச்சையும் நடைபெறும். மாலை 2 மணி முதல் கல்வித் துறையில் அதிகப் பழக்கமுள்ள ஆயுர்வேத வைத்ய நிபுணர்களின் சர்ச்சாபரிஷத்து நடைபெறும். அகில இந்திய ரீதியில் ஆயுர்வேதக் கல்வித் திட்டம் வகுப்பதைப் பற்றி இதில் சர்ச்சை நடைபெறும். எல்லா ஆயுர்வேத வைத்யர்களும் இதில் பங்குகொண்டு சிறப்புற நடத்துமாறு ஸபைக் காரியதர்சி தெரிவிக்கிறார்.

ஸ்ரீ கொண்டல் ராவ் அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணம்.

இந்தியாவிலேயே சிறந்த முறையில் நடந்துவரும் ஆயுர்வேத மருந்து உற்பத்தி சாலை என உடுப்பா கமிட்டியினரால் புகழப்பட்டுள்ள சென்னை-அடையார் இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட்டின் கார்யதர்சி ஸ்ரீ. Y. கொண்டல் ராவ் L. I. M. அவர்கள் சென்ற ஆகஸ்டு மாதத்தின் மத்தியில் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணமாகப் புறப்பட்டு, இங்கிலாந்து, டென்மார்க், பிரான்ஸ், மேற்கு ஜர்மனி, ஸ்விட்ஜர்லாந்த், இத்தாலி நாடுகளிலுள்ள மருந்து உற்பத்தித் தொழிற்சாலைகளையும், மருத்துவ நிலையங்களையும் நேரில் பார்த்துவிட்டு 2—11—59-ல் சென்னைக்குத் திரும்பி வந்துள்ளார். ஆங்காங்குள்ள மருந்து உற்பத்தித் தொழிற்சாலைகளில் அவர் கண்ட முன்னேற்ற வழிகளை ஆராய்ந்து தகுந்தவைகளை அடையாரில் தமது பார்மஸியில் கையாண்டு முன்னேறச் செய்வதில் இந்த வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம் மிகவும் உதவும் என்று நம்புகிறோம்.

சர்ம ஆரோக்கியம்

சில மாதங்களுக்கு முன் டாக்டர் வெங்கடேசன் மதுரையில் செய்த ஒரு பிரசங்கத்தில் சர்மம் மனதை படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்றும், சர்ம ஆரோக்கியத்திற்குச் சந்துஷ்டியும் நிம்மதியும் இன்றியமையாதவை என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, துரதிருஷ்ட வசமாக நம்மில் அனேகர் அழகு சாதனங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறோம். சிலர் பவுன் மாதிரி முகப் பவுடர்களை அப்பிக் கொண்டு வருவதைப் பார்க்க அருவருப்பாக இருக்கிறது...சர்மம் வறண்டு போவதற்கு வைட்டமின் ஏ குறைவு காரணம். முள்ளங்கி, வாழைப்பழம், வெண்ணெய், பால், முட்டையின் மஞ்சட் கரு, பச்சைக் காய்கறிகள் சாப்பிட்டு, இதைப் போக்கிவிடலாம். வைட்டமின் பி பால். பார்லி, பச்சைக் காய்கறிகள், ஈஸ்ட், ஈரல், பருப்பு வகைகளில் நிறைய இருக்கிறது. இவை பல சர்மக் கோளாறுகளைச் சரிப்படுத்தும்...நரை மயிரைக் கறுப்பாக்குவதற்குப் பலன் தரும் மருந்து இல்லை. கறுப்பாக்கும் தைலங்கள் எல்லாம் தற்கால சாந்திதான். நரைமயிர் வந்துவிட்டதே என்ற கவலை உள்பட கவலைகளே இல்லாமல் இருப்பதே நரைமயிருக்கு நல்ல மருந்து.

‘மார்த்தண்ட’வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்.

சீக்ரத்தில் குணமளிக்கும்

இந்த எட்டு வித இஞ்சக்ஷனைக் கவனியுங்கள்!

நவீன ஸம சீதோஷ்ண வசதியும் புதிய இயந்திரங்களும் அமைந்த ‘மார்த்தண்ட’ மருந்து தயாரிப்பு சாலையில் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று தகுதி வாய்ந்த ரஸாயனிகளால் தயாரிக்கப் பெற்ற எட்டு வகை இஞ்சக்ஷன்களான **ஸோமா** ச்வாஸகாஸங்களிலும், **சூலாந்தக** எல்லா வாயு வலிகளிலும், **ஸ்ம்ருதிதா** உன்மாத மூர்ச்சைகளிலும், **ஹ்ருதயாம்ருத** ஹ்ருதய பலஹீனத்திலும், **தாபீகர** ஜன்னி ஜல தோஷங்களிலும், **மருதாசீ** வாதரோகங்களிலும், **ப்ரதராரி** பெரும்பாட்டிலும், **க்லீபாந்தக** நபும்ஸகத்திலும் உடனே ஆச்சர்யமாய் குணமளிக்கின்றன. இவைகளை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள். ஆராய்ச்சிக்காகப் பயன்படும் படங்களடங்கிய **மார்த்தண்ட** மாதப் பத்ரிகையை இலவசமாகப் பெறுங்கள். இவை தவிர ஆஸவம் அரிஷ்டம் பஸ்மம் சூர்ணம் முதலியவைகளும் சாஸ்த்ரீய முறை தவறாது தயாராகின்றன. கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

MARTAND PHARMACEUTICALS,

(Research Institute of Indian Medicines)

BARAUT S. S. Rly, (U. P.)

சூர்ணத்தைப் போட்டு கிளறிக் கொள்ளவும். செவதை வேர், வாலுளுவை, கொடிவேலி வேர் பட்டை இவை வகைக்கு 8 தோலா, ஏலரிசி, லவங்கப்பட்டை, மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்கு 24 தோலா, இவைகள் சூரணமாகப் போடத் தகுந்தவை. பாலன்னமும் மாம்ஸ ரஸமும் சாப்பிடலாம். குல்மம், பிரமேகம், பாண்டு, காமிலே, மூலம், உதரம், கிரஹணி, ராஜயக்ஷ்மா இவைகள் போகும்.

❋ **குடபல்லாதகம்-1:** (பை.ர.) சேங்கொட்டை ஜலத்தில் அமிழ்வதாகப் பொறுக்கி எடுத்தது எண்ணிக்கையில் 2000 எடுத்து 6 படி ஜலத்தில் 1½ படி மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டி அதில் 400 தோலா வெல்லத்தைக் கரைத்துப் பாகாக்கி அதில் 500 சேங்கொட்டையை வெட்டிப் போட்டு லேஹிய பதத்தில் திரிபலே, திரிகடு, ஓமம், கோரைக்கிழங்கு, இந்துப்பு, சதுர்ஜாதம் (13 சரக்குகள்) இவைகள் வகைக்கு ஒரு தோலா தூள் செய்து போட்டுக் கிளறி தினம் காலேயில் ஒரு தோலா வரை சாப்பிட மூலம், குஷ்டம், காமாலே, பிரமேஹம், கிரஹணி, குல்மம், பாண்டு, ப்லீஹோதரம், காஸம், கிருமி, பகந்தரம் இவை நீங்கும்.

❋ **குருபல்லாதகம்-2:** (பை. ர.) தசமூலம் சிந்திற்கொடி, சிறு தேக்கு, நெரிஞ்சில்முள், கொடிவேலி வேர் பட்டை, பூலாங்கிழங்கு இவை வகைக்கு 4 தோலா சேங்கொட்டை 1000, இவைகளே 6 படி ஜலத்தில் 1½ படி மீதமாகக் கஷாயமிட்டு, வடிகட்டி, 400 தோலா வெல்லம் சேர்த்துப் பாகாக்கி சிற்றாமணக்கெண்ணெய் 16 தோலாவும், திப்பிலி 16 தோலா, ஏலரிசி 5 தோலா, லவங்கப்பட்டை 5 தோலா, மிளகு 5 தோலா இவைகளின் சூர்ணத்தையும் கலந்து, ஆறிய பின்னர் தேன் 16 தோலா கலந்து கொள்ளவும். மூலம், காஸம், மலபந்தம், பாண்டு சோதம், அக்னிமந்தம் இவை நீங்கும்.

❋ **வார்த்தாகு குடிகா:** (பை. ர.) கள்ளித்தண்டு 16 தோலா, ஸௌவர்சிலே உப்பு 4 தோலா. இந்துப்பு 4 தோலா, கந்தகவெடியுப்பு, 4 தோலா, முள்ளுக்கத்திரி 16 தோலா, எருக்கம் வேர் 32 தோலா, கொடிவேலி வேர் 8 தோலா இவைகளே எரித்து க்ஷாரமாக்கி, முள்ளுக் கத்திரிச் சாற்றிலரைத்து மாத்திரை செய்து உணவிற்குப் பின் சாப்பிட காஸம் ச்வாஸம், மூலம், காலரா சளி, ஹிருதயரோகம் இவைகளில் நல்லது.

ரத்தார்சஸில் சில பொதுமுறைகள்.

ரத்த அர்சஸில் முதலில் ரத்தத்தைத் தடைசெய்யக் கூடாது. அவ்விதம் செய்தால் அசுத்த ரத்தம் வெளியாவது தடைபடுவதால்,

வயிற்றுக்குத்து வலி, வயிற்று உப்புசம் விஸர்பம் போன்றவை ஏற்படும். வெட்பாலையரிசியின் கஷாயம், வெட்பாலை, சுக்கு இவைகளின் கஷாயம், வில்வப் பிஞ்சின் சூர்ணம் இவை உள்ளுக்குச் சாப்பிடவும். பேய்ச்சுரையின் வேரை அரைத்து மூலத்தின் வேரில் தடவுவதும் நல்லது (வெட்பாலையரிசிக்குப் பதில் கஷாயத்தில் வெட்பாலைப்பட்டை சேர்த்துக் கொள்வதும் உண்டு.)

ரத்த மூலத்தில் வெண்ணெய்யில் எள்ளுப் பொடி கலந்தும், நாக கேஸரம் அல்லது தாமரை கேஸரம் அல்லது குங்குமப்பூவை வெண்ணெய் யும் சர்க்கரையும் சேர்த்தும், தினம் சாப்பிட்டு வருவது நல்லது அம்மாதிரியே தயிர் மேல் தெளிவைப் பிரித்து அத்தெளிவை நன்கு கடைந்து சாப்பிடுவதும் நல்லது.

மஞ்சிட்டி, நீலோத்பலம் இலவம்பிசின், வெள்ளை லோத்திரப் பட்டை, கருப்பு எள்ளு, வெண் சந்தனம் இவைகளைத் தூள் செய்து கொண்டு ஆட்டுப்பாலுடன் சாப்பிட்டுவர நல்லது. காலையில் ஆட்டுப் பாலைக் குடித்து மேல் இளம் தாமரை இலையை அரைத்து சர்க்கரை சேர்த்து மென்று சாப்பிடலாம். எள்ளை அரைத்துச் சர்க்கரை சேர்த்து ஆட்டுப்பாலில் குழப்பி சாப்பிடலாம். வெட்பாலைப் பட்டையை அரைத்து மோரில் குழப்பிச் சாப்பிடலாம். நாயுருவி வேர் 1 தோலாவைக் கழுநீர் விட்டரைத்து கழுநீர்விட்டுக் குழப்பிச் சாப்பிட்டு மேல் ஆட்டுப் பால் சாப்பிடலாம்.

மாதுளம் பழத்தை ஓட்டுடன் புடபாகம் செய்து சாறு பிழிந்து சர்க்கரை சேர்த்தும் மாதுளம்பழ மணிகளை சர்க்கரை சேர்த்துப் பிசிறிச் சாறு எடுத்தும் சாப்பிடலாம். நாகலேஸரமும் தாமரை கேஸரமும் சர்க்கரை சேர்த்துத் தூள்செய்து தேன், புதிய வெண்ணெய் இவைகளுடன் இடைவிடாமல் சாப்பிடலாம். மனிதன் தலைமயிர், பாம்புச் சட்டை, பூனைத்தோல், எருக்கம்வேர், வன்னி இலை இவைகளை மூலமுளைக்குப் புகையிடுதல் நலம்.

நொச்சிவேர், அல்லது இலை, முள்ளுக்கத்திரி, அமுக்கராக்கிழங்கு, திப்பிலி இவைகளின் சூரணத்தை நெய் விட்டுப் பிசிறி முளைக்குப் புகை போடலாம். வெள்ளைக் குங்கிலியத் தூளை கடுகெண்ணெய் விட்டுப் பிசிறி, புகையிடுதலும் கர்பூரப்புகை இடுதலும் நல்லது. கோதுமை மாவு 4 தோலா, பெருங்காயம் $\frac{1}{8}$ தோலா, சேங்கொட்டை 4, இவைகளை இடித்துப் பிசிறி முளைக்கு மாத்திரம் புகையிட நல்லது.

✲ **பிருஹத்பல்லாதகாவலேஹம்:** (பை. ர.) நல்ல பழுத்த சேங்கொட்டை 256 தோலா. இவைகளை வெட்டி 6 படி பால் கலந்து சிறிது நெய்யும் 64 தோலா சர்க்கரையும் சேர்த்துக் கெட்டியாகப் பால் கோவாவாக ஆகும் வரை காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். இதைத் தகுந்த பத்யத்துடன் சாப்பிட்டு வர மூலம் நீங்கும். கேசங்கள் கறுக்கும். கண் பார்வை கூர்மை பெறும் நிறம் தெளிந்து அழகுடன் இருக்கும். சிறந்த ரஸாயனமாகும்.

✲ **தந்த்யரிஷ்டம்:** (பை. ர.) தந்தீ மூலம், கொடிவேலி வேர் பட்டை, தசமூலம் திரிபலை (15 சரக்குகள்) இவை வகைக்கு 4 தோலா, இவைகளை 6 படி ஜலத்தில் 1½ படி மீதமாகக் காய்ச்சி, வடிகட்டி அதில், 400 தோலா வெல்லம் போட்டுப் பானையிலிட்டு ஒரு மாதம் வைத்திருந்து நன்கு அரிஷ்டமானவுடன் சாப்பிட கிரஹணீ, பாண்டு, மலக்கட்டு, வாயுக்கட்டு, அருசி, மூலம் இவை நீங்கும்.

✲ **அபயாரிஷ்டம்:** (பை. ர.) கடுக்காய் தோல் 400 தோலா, திராக்ஷை 200 தோலா, வாய்விளங்கம் 40 தோலா, இலுப்பைப்பூ 40 தோலா, இவைகளை 25 படி ஜலத்திட்டு 6¼ படி மீதமாகக் காய்ச்சி, வடிகட்டி வெல்லம் 400 தோலா, நெரிஞ்சில், செவதைவேர், மல்லிவிதை, காட்டகத்திப்பூ, பேய்த்தும்மட்டிக்காய், செவ்யம், சோம்பு, சுக்கு, தந்தி மூலம், காரிலவம்பிசின் இவை வகைக்கு 8 தோலா, சூர்ணம் செய்து போட்டு அரிஷ்டமாக்கிய பின்னர் சாப்பிடவும். மூலம், உதரம், மல மூத்ரக்கட்டு, அக்னிமந்தம் இவைகளில் நல்லது.

✲ **பிருஹத்திராக்ஷாஸவம்:** (பை ர.) திராக்ஷை 400 தோலா, கல்கண்டு 1600 தோலா, இலந்தைவேர் 200 தோலா, காட்டகத்திப்பூ 100 தோலா, பாக்கு, கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, திரிகடு, ரூமிமஸ்தகி, தாமரைக்கிழங்கு, அக்கரகாரம், கோஷ்டம் இவை வகைக்கு 40 தோலா, இவைகளை இடித்து 70 படி ஜலத்தில் போட்டு பூமிக்குள் பதினைந்து தினங்கள் வைத்திருந்து அர்க்கயந்த்ரத்திலிட்டு ஊறலை எடுத்து அர்க்க தாரை விழுமிடத்தில் கஸ்தூரியும் குங்குமப்பூவும் முடித்துக் கட்டி வைத்து அந்த அர்க்கத்தைத் தயாரிக்கவும். இந்த அர்க்கத்தை மத்யான்னவேளையில் 2-4 அவுன்ஸ் அளவும், இரவு 3-6 அவுன்ஸ் அளவும் சாப்பிடலாம். நல்ல ஸ்நிக்தமான குருவான உணவு சாப்பிடவேண்டும். நல்ல பலமும் வீர்யமும் பெருகும்.

✲ **உத்பலஷட்பலககிருதம் :** (பை. ர.) திப்பிலி, கண்டந் திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, யவக்ஷாரம் இவை வகைக்கு 4 தோலா, இவைகளின் கல்கத்தை 64 தோலா நெய்யில் குழப்பி $1\frac{1}{4}$ படி ஜலமும் $\frac{3}{8}$ படி பசுவின் பாலும் சேர்த்துக் காய்ச்சிய கிருதத்தை மூலம், ப்லீஹம் காஸம் இவைகளில் கொடுக்க நல்லது.

✲ **வ்யோஷாத்யகிருதம் :** (பை. ர.) சுக்கு, திப்பிலி, மிளகு இவை வகைக்கு 4 தோலா, இவை கல்கம், நெய் 48 தோலா, புரசம் பட்டை க்ஷாரம் கரைத்த ஜலம் 144 தோலா இவைகளைக் கிருதமாகக் காய்ச்சி எடுத்துச் சாப்பிட நல்லது.

✲ **குடஜாதிகிருதம் :** (பை. ர.) வெட்பாலையரிசி, வெட்பாலைப் பட்டை, சிறுநாகப்பூ, அல்லிப்பூ, வெள்ளை லோத்திரப்பட்டை சாட்ட கத்திப்பூ வகைக்கு 1 தோலா இவை கல்கம், நெய் 24 தோலா (ஜலம் 96 தோலா) இவைகளை நெய்யாகக் காய்ச்சிச் சாப்பிட நல்லது.

✲ **ஸிம்ஹ்யாதிகிருதம் :** (பை. ர.) கண்டங்கத்திரி 400 தோலா, சீந்திற்கொடி 400 தோலா, இவைகளை 25 படி ஜலத்தில் $6\frac{1}{4}$ படி மீதமாகக் கஷாயமிட்டு நெய் 256 தோலா, சித்திர மூலப் பட்டை, திரிபலை, திரிகடு, ஆவல்பட்டை, வெட்பாலையரிசி, குமிழம்பட்டை, வாய் விளங்கம் இவை (11) களை வகைக்கு 6 தோலா கல்கம் ; சேர்த்துக் கிருத மாக்கவும், மூலத்திலும் பிரமேகத்திலும் நல்லது.

✲ **ஸுநிஷண்ணகசாங்கேரீகிருதம் :** (பை ர.) சோம்பு, சிற்ற முட்டிவேர், மரமஞ்சள், மூவிலை, நெருஞ்சி, ஆலம்மொக்கு, அத்திமொக்கு, அரசமொக்கு இவை வகைக்கு 8 தோலா, இவைகளை 3 படி ஜலத்தில் $\frac{3}{4}$ படி மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டிக் கொள்ளவும். அடபதியன் கிழங்கு, கடுகுரோகிணீ, திப்பிலி, கண்டந்திப்பிலி மிளகு தேவதாரு, வெட்பாலையரிசி, இலவம்பூ, கோவைவேர், சந்தனம், அஞ்சனக்கல், காய்ப்பல், கொடிவேலி வேர் பட்டை, கோரைக்கிழங்கு. ஞாழல்பூ, அதிவிடயம், ஓரிலைவேர், மூவிலைவேர், தாமரை கேஸரம், அல்லிகேஸரம், மஞ்சிட்டி, கண்டங்கத்திரிவேர், வில்வப்பிஞ்சு, இலவம்பிசின், வட்டத் திருப்பி இவை ஒரு தோலா வீதம் எடுத்த கல்கம், பசலைக்கீரையின் சாறும் புளியாரைக் கீரையின் சாறும் வகைக்கு 256 தோலா, நெய் 256 தோலா. இவைகளைக் கிருதமாகத் தயாரித்துக் கொள்ளவும். மூலம் அதிஸாரம், ரத்தஸ்ராவம், பிரவாஹிகா, குதப்ரம்சம், சீதபேதி, வீக்கம், சூலம், நீர்க்கட்டு, மூடவாதம், அக்னிமந்தம் அருசி இவைகளில் நல்லது.

நெ.	ஸம்ஸ்க்ருதப்பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
420	दशनाः	தசநம்	பற்கள்	Teeth.
421	दंष्ट्रा	தம்ஷ்டிரா	முன் கடி பற்கள் தெத்திப்பற்கள்	Premolar, Canine.
422	दहनाशयः	தஹநாசயம்	சிறுகுடல்	Small intestine.
423	दुग्धहारिणी नाडी	துக்தஹாரிணீ நாடீ	பால் சுரக்கும் ஸ்ரோதஸ்கள்	Lactiferous Ducts.
424	दृष्टिः	திருஷ்டி:	கண் பாப்பா, கண் கருப்புத்திரை கண் கோளம்	Pupil, Lens, Eye ball.
425	दृष्टिगोलकं	திருஷ்டி கோலகம்	கண் கோளம்	Eye ball.
426	दृष्टिमण्डलं	திருஷ்டி மண்டலம்	கண் திரை கண் பாப்பா	Lens, pupil.
427	देहः	தேஹம்	உடல்	Body as a whole.
428	देहवल्कलं	தேஹவல்கலம்	உடல் மேலுள்ள தோல் பரப்பு	Superficial fascia
429	देहावयवाः	தேஹாவயவங்கள்	உடல் பகுதிகள்	Different parts, organs or Structures of the body.

நெ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
430	देहावयवसूत्रं	தேஹாவயவ ஸூத்ரம்	உடற் பகுதிகளின் ஸூக்ஷ்ம அமைப்பு	Minute or histological s'ructure of the bcdy a organs.
431	देहोष्मा	தேஹோஷ்மா	உடற் சூடு	Body temperature.
432	दैवकृतं छिद्रं	தைவகிருதச் சித்ரம்	உடலின் ரத்தமில்லாத மெல்லிய பின்புறம் தெரியும் பகுதி (உதாரணம்- காது குத்துமிடம்)	Nonvascular, thin and translucent point.
433	द्विजा:	த்விஜா:	பற்கள், முக்யமாய் விழுந்து முளைக்கும் பற்கள்	Teeth, especia'ly succedaneous teeth.
434	धमनी	தமனீ	சுத்த ரத்தக் குழாய், அசுத்த ரத்தக் குழாய், நரம்பு அல்லது குழாய்	Artery, Vein, Nerve, Any channel tube or canal.
435	धरा	தரா	கர்பாசயம்	Uterus.
436	धातवः	தாது	சரீரத்தின் முக்ய வஸ்துக்கள்	Main constituents of the body.

எ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
437	धातुव्यूहः	தாது வ்யூஹம்	சரீரத்தில் பல்வேறு பகுதிகள்	Different systems of the body.
438	धात्वग्निः	தாத்வக்னி	தாதுக்களில் உள்ள. அவைகளிலிருந்து மற்ெருரு தாதுவை உண்டாக்க வல்ல அக்னி.	Metabolic agents, Tissue emzymes.
439	ध्वजः	த்வஜம்	ஆண்குறி	Penis.
440	नखं	நகம்	நகம்	Nails.
441	नखमांसं	நகமாம்ஸம்	நகத்தின் சுற்றியுள்ள மாம்ஸ பாகம்	Nail bed, Nail matrix, Digital Pulp.
442	नखसन्धिः	நகஸந்தி	நகம் பதியுமிடம்	Nail root, Nail fold, Nail groove.
443	नयनबुद्बुदः	நயனபுத்புதம்	கண் கோளம்	Eye ball.
444	नलकानि	நலகம்	நீரெலும்புகள்	Long bones.
445	नाडी	நாடீ	உடலிலுள்ள குழாய் அல்லது குழாயில்லாத நரம்பு	Vessels, cord, meatus canal, Tube, Nerve.

நெ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
446	नाडीचक्राणि	நாடீ சக்ராணி	ஸ்வதந்திர நரம்புகளின் சிடுக்குகள்	Plexuses of the autonomic nerves.
447	नाभिः	நாபி	தொப்புள், சிறு குடல் ஆரம்பப் பகுதி, ஹிருதயத்திற்கும் ஆமாசயத்திற்கும் மேலுள்ள தசை விரிப்பு	Navel, Umbilicus, Duodenum, Heart, Diaphragm.
448	नाभिनाडी	நாபி நாடீ	தொப்புள் கொடி	Umbilical cord.
449	नाभिप्रदेशः	நாபிப்ரதேசம்	தொப்புள் பிரதேசம்	Umbi'ical region, Hypogastric region.
450	नाभिबन्धनं	நாபிபந்தனம்	தொப்புள் கொடியின் தொப்புளை ஒட்டியுள்ள பாகம்	Umbilical end of the cord.
451	नाभिमण्डलं	நாபிமண்டலம்	தொப்புளைச் சுற்றியுள்ள பாகம்	Round area of the umbilicus.
452	नाभिमूलं	நாபிமூலம்	தொப்புளின் அடி வயிறு	Pubic or supra-pubic region.

வாரியர்

க்ஷீரபலா - 101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS.

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA. PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீநிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.

வைஸ்பிரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)

வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை ...	ரூ.	84,735
சங்கத்தின் க்ஷேம நிதி ...	ரூ.	2,46,709
கட்டடநிதி ...	ரூ.	1,55,402
மற்ற நிதிகள் ...	ரூ.	2,75,016

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5-00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசீய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்கமேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்.

— எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னாவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா-2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு. பெங்களூ[illegible] (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம். [illegible] கோழிக்கோடு-2. (கேரள ராஜ்யம்)

(4) நகர விற்பனை டிப்போ. 4/186. ம[illegible] டெலிபோன் நெ. 86520.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினல் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

“சக்தி ஸஞ்ஜீவி”

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்
எங்கும் கிடைக்கும்.

❋

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)

...n Press, Srirangam and Published by
...amilnad Ayurveda Maha Mandalam,
...dai Street, Teppakulam, Tiruchy
...arya, Srirangam.